1984 மார்ச் 15]

பள்ளி ஆய்வுக் கூடங்கள்

*101 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ் நாட்டில் இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூடங்களே இல்லாத மேல்நிலைப் பள்ளிகள் 13—2—1982 நாளன்றுள்ளவாறு எத்தனை?

(இ) அப்பள்ளிகட்கு ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(உ) அவை எப்போது முழுமையாகச் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஏதும் இல்லை.

(இ) மற்றும் (உ) இக்கேள்விகளுக்கிடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: ஆய்வுக் கூடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றை தனியார் அல்லது பொது நிறுவனங்கள் கட்டித்தர முன்வந்தால், அவர்களுடைய பெயரை வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கட்டிடங்களைக் கட்டித் தருகின்ற போது, உயிரோடு இல்லாதவர்களுடைய பெயரை வைக்க அல்லது அவர்கள் சொல்லுகின்ற பெயரை வைக்க அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

Ph. D. Allowance.

*102 *Q.*—Dr. T.R. JANARTHANAM (on behalf of Thiru M. Sankaralingam): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Ph. D. Allowance paid to College Teachers working in Tamil Nadu, was withdrawn from 4th September 1979; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. 4—9—1979 க்கு முன் டாக்டர் படி பெற்றுவந்த கல்லூரி ஆசிரியர்கள், படியை தொடர்ந்து பெற்றுவருகின்றனர்.

(இ) கேள்விக்கிடமில்லை.